07.07.2026

ID.OP. No. 215/2024

**எம.சா.1 – சங்கீதா**

**<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

நான் மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவை படித்து பார்த்துள்ளேன். அவர் என்ன காரணத்தை மனுவில் சொல்லியுள்ளார் என்பது தெரியும். எனக்கும், மனுதாரருக்கும் திருமணமாகி 14 வருடங்கள் ஆகிறது. எங்களுக்கு ஒரு பெண் குழந்தை 2014ம் வருடம் பிறந்தது. குழந்தை என்னிடம் தான் உள்ளது. எனது திருமணத்தின் போது எதிர்மனுதாரர் வெளிநாட்டில் வேலை செய்தார் என்பது எனக்கு தெரியும். திருமணத்திற்கு முன்பாக எதிர்மனுதாரர் எத்தனை ஆண்டுகள் வெளிநாட்டில் வேலை செய்தார் என்பது எனக்கு தெரியாது. எதிர்மனுதாரர் திருமணத்திற்கு பின்பு என்னை 3 மாதத்திற்கு ஒருமுறை வந்து பார்த்து செல்வார். திருமணத்திற்கு பின்பு எந்த மாதம் அவர் வெளிநாட்டிற்கு சென்றார் என்றால் எனக்கு ஞாபகமில்லை. திருமணமான 10 நாட்களிலேயே பிரச்சனை ஆகிவிட்டது என்று சொல்லும்போது அது சம்பந்தமாக பஞ்சாயத்து பேசினோமா என்றால் பேசினோம். நான் திருமணத்தின்போது B.Sc. படித்திருந்தேன். என்னுடன் உடன்பிறந்தவர்கள் ஒரு அக்கா, ஒரு தம்பி, ஒரு தங்கை. என் தகப்பனார் சென்ட்ரிங் கான்ட்ராக்ட் தொழில் செய்து வந்தார். 2018ம் வருடம் எனது தகப்பனார் இறந்துவிட்டார். திருமணத்திற்கு முன்பே மனுதாரர் குடும்பம், கூட்டு குடும்பம் என்பது எனக்கு தெரியும். திருமணத்திற்கு பின்பு புதுக்கோட்டை மாவட்டம், வேங்கிடகுளம் என்ற கிராமத்தில் கூட்டு

குடும்பமாக வசித்தோம் என்றால் சரிதான். மனுதாரர் குடும்பத்துடன் ஆரம்பத்திலிருந்தே உறவு சுமுகமாக இல்லை. இதனால் எனக்கும், மனுதாரருக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். கூட்டு குடும்பத்தில் நான் இருப்பது பிரச்சனை இருந்து வந்ததால் எனக்கு அதே கிராமத்தில் தனியாக வீடு கட்டி மனுதாரர் வைத்தார் என்றால் சரிதான். அந்த வீட்டில் நானும், எனது கணவரும் இருந்தோம். அப்போது என் கணவர் வெளிநாட்டில் இருந்தார் என்றால் சரிதான். எந்த வருடம் வீடு கட்டினார் என்றால் 2015ம் ஆண்டில் கட்டினார். தன் மகனுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களுடன் தொடர்பு இருப்பதாக என் மாமியார் என்னிடம் சொன்னார் என்று என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளபோது அதற்கு ஆதாரம் உள்ளதா என்றால் இல்லை. அவ்வாறு நான் சொல்வது பொய் என்றாலும், மனுதாரர் அவ்வாறு யாருடனும் பழகவில்லை என்றாலும், நான் மனுதாரர்மீது அபாண்டமாக பழி சொல்வதற்காக அவ்வாறு சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**(மனுதாரர் வழக்கறிஞர் வேண்டுகோளுங்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

CHRISTOPHER M

Digitally signed by CHRISTOPHER M
Date: 2026.07.07 16:49:32 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.